**நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II - 2014**

நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய எஸ்எல்-பி 93 ஆம் இலக்க துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல்-பி 93 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியின் தெற்கு பகுதியில் நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்குவதன் மூலம் பாதுகாப்பான குடி தண்ணீரை வழங்குவதும் கொழும்பு நகரத்திலுள்ள வலயம் IV பகுதியில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதும் அதன் மூலம் அப்பகுதிகளில் வாழ்க்கைச் சூழலை முன்றேற்றுவதற்கு பங்களிப்பு செய்வதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 10,330 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 10,846 மில்லியனானதுடன் அதில் ரூபா 7,989 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 8,388 மில்லியன் அல்லது 77.3 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 2,341 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,458 மில்லியன் அல்லது 22.7 சதவிதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2017 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான

கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 21 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் சார்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் செலுத்தப்பட்ட ரூபா 211.93 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி கட்டணங்கள் என்பன செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பத்தளை வேலைத்தள அலுவலகத்தில் இருந்த ரூபா 17.21 மில்லியன் கிரயத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புக்கள் செயற்திட்டத்தின் ஆதனங்களாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் 5 ஆண்டுகளை பூர்த்திசெய்திருந்த உத்தியோகத்தர்களிற்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணிச் சுவீகரிப்பு நோக்கத்திற்காக செலவழித்த ரூபா 4.16 மில்லியன் தொகை காணி மற்றும் காணி அபிவிருத்தியின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளாக கருதப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

மீளாய்வாண்டு இறுதியில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 8,618.17 மில்லியன் பெறுமதியான நடைபெறும் வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பதிவேடுகளில் ஜ.காட்டப்பட்ட ரூபா 8,647.50 தொகையான நடைபெறும் வேலைகளின் நேரொத்த பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 8,388 | 7,989 | 1,500 | 1,499 | 1,831 | 5,924 | 8,076 |
| இலங்கை அரசாங்கம் | 2,458 | 2,341 | 295 | 258 | 298 | 1,256 | 1,613 |
| மொத்தம் | 10,846 | 10,330 | 1,795 | 1,757 | 2,129 | 7,180 | 9,689 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீள் பட்டியலிடப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்திக்ன் காலப்பகுதி 2017 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட செயன் முன்னேற்ற பொழிப்பின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒப்பந்தங்கள் 19 பொதிகளின் கீழ் வழங்கப்பட்டிருநததுடன் அதில் 11 பொதிகளின் கீழான ஒப்பந்தங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. குடாத் தீவு மற்றும் சேற்றுப் பகுதியில் விநியோக முறைமையின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தின் கீழான வேலைகளின் 37 சதவீத மெதுவான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், கெஸ்வேவ கிழக்கு/ மேற்குகின் பின்தங்கிய மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளின் குழாய்களின் குழாயிடல் மற்றும் பிலியந்தலை மற்றும் குபேகவில் பொறியியலாளர் அலுவலக பகுதிக்கான அலுவலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியில் 64 சதவீத பௌதீக முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 ஒப்பந்த பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 84,039 மீற்றர் குழாய்கள் பொருத்துதல் நடவடிக்கைகளில், 12,802 மீற்றர் குழாய் பொருத்தல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், ஆரம்ப அங்கீகரிக்காத நலனாளி வெளித்தரப்பினரின் வேண்டுகையில் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட குழாயிடல் பகுதிகளில் இல்லாதிருந்த பாணந்துறை மற்றும் கிரிபேரியவில் மேலதிகமாக 9,388 மீற்றர் குழாயிடல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தால் வேலைகள் தொடங்குவதிலுள்ள தாமதம் காரணமாக 04 ஒப்பந்தங்களிற்காக ஆரம்ப மற்றும் விலைத்தளம்பல்களின் மேலதிக கிரயமாக ரூபா 108.15 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரரால் நடவடிக்கைகளின் அமுலாக்கலிலுள்ள தாமதம் காரணமாக கொழும்பு தெற்குப் பகுதியில் குழாய்வழி விநியோகத்தின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்களில் ஆரம்ப வேலைகள் மற்றும் விலைத்தளம்பல்களில் மேலதிக கிரயமாக ரூபா 55.79 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 வரை ஒப்பந்தகாரரிடமிருந்து எந்தவொரு தாமதக்கட்டணங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வழமையாக, செயற்திட்ட பதவியணியினரிற்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை பேணியிருந்த போதிலும் சம்பள கிரயத்தின் 20 சதவீதம் மேந்தலை செலவினமாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 வரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைச் லெவினம் ரூபா 54.30 மில்லியனாகும்.

### 3.5. வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்:றும் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக ஹொரனையில் 10 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களின் நோக்கத்திற்காக செயற்திட்டத்தால் ரூபா 1.00 மில்லியன் தொகையான மீளளிக்ககூடிய வைப்புக்கள் செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தால் ரூபா 88.17 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) கெஸ்வேவ மற்றும் ஹோமாகம் பிரதேச பகுதிகளில் வசிக்கின்ற குடும்பங்களிற்காக சுகாதார வசதிகளை முன்றேறுவதற்கு ரூபா 5 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைகளாக காட்டப்பட்டிருந்தது.

(இ) வெல்மில்ல மற்றும் கின்டெல்பிட்டியவில் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரத்தின் நிர்மாண வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 394.46 மில்லியன் தொகை வேலைகளின் நோக்கெல்லையின் முரண்பாடுகள் காரணமாக ரூபா 499.37 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதில் அவற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 71.91 மில்லியன் பெறுமதியான மேலதிகமான வேலைகள் செயற்திட்டத்தால்

அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வேலைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

(ஈ) தியகம விளையாட்டு கட்டிடத்தொகுதியின் பரிமாற்ற கிரயமாக ஏற்பட்ட ரூபா 32.64 மில்லியன் தொகை செயற்திட்டதின் நோகத்தை அடைவதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.6. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், செயற்திட்டத்தால் ரூபா 47.15 மில்லிளன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள மீதான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.